இம்மாதிரியே விட்டால் ஒருவர் அல்ல, பல பேர்கள் தவறு செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: தலைவரவர்களே, கோ–ஆப்டெக்ஸ் தனி அலுவலர், காஞ்சிபுரம் உதவி இயக்குநருக்கு அறிக்கை கொடுத்து அதன் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கவிதி 66-ன் கீழ் சட்டரீதியான ஆய்வு மேற்கொள்ள காஞ்சீபுரம் உதவி இயக்குநருக்கு ஆணை யிட்டுள்ளார். காஞ்சீபுரம் உதவி இயக்குநரும் சட்டபூர்வ விசாரணையினை நடத்தி வருகின்றார். விரைவில் விசாரணை அறிக்கை வரப்பெறும். சட்டபூர்வ விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் விற்பனையில் தள்ளுபடி

*வினா எண். 80— திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பெருந்தலைவர் காமராஜ் பிறந்த தினத்தின்போது கைத்தறி துணிகள் விற்பனைக்குத் தள்ளுபடி வழங்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்ததினத்தை சிறப்பிக்கும் பொருட்டு 7 நாட்களுக்கு 20சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]